RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

DOI: 10.34256/ijot2134

# ஆற்றுப்படை இலக்கியங்களில் இறைவழிபாடும் நம்பிக்கையும்

வே. ராசாம்பாள் [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, கந்தசாமிக் கண்டர் கல்லூரி, நாமக்கல்-638182, தமிழ்நாடு, இந்தியா.

# The spiritual rituals and the faiths present in the Aaruppadai Literatures

**V. Rasambal** [a, *]

[a] Department of Tamil, Kandaswami Kandar's College, Namakkal-638182, Tamil Nadu, India.
*Corresponding author Email: rasambalkkc@gmail.com
DOI: https://doi.org/10.34256/ijot2134
Received: 27-05-2021; Revised: 15-07-2021; Accepted: 18-07-2021; Published: 20-07-2021

**Abstract:** The intellectual capacity of a society can be measured by its beliefs. From the birth to death of man, people have a variety of beliefs. Most of the Ancient Tamils believed in God. It was the root cause of man's practice of worship. It is the faith of God. The intellectual capacity of a society can be measured by its beliefs. The purpose of this article is to state that the ancient people sat in the river army literature, where the deity of the ancient people had beliefs in climbing, Paliyiṭuthal, Nadukal valipadu, screaming, ghost and goblin beliefs.

**Keywords:** Local Rituals, Pandemic, Smallpox, Appropriation, Texts (oral and literary).

## முன்னுரை

ஆறு என்னும் சொல்லுக்கு வழி அல்லது நெறி என்பது பொருளாகும். ஆற்றுப்படுத்துதல் என்றால் அறிந்தவன் ஒருவன் அறியாதவன் ஒருவனை வழிப்படுத்துதலாகும்.

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் அறிவுறீஇச்
சென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும்

என்ற தொல்காப்பிய நூற்பாவினால் அறியலாம்.

புரவலன் ஒருவனிடம் பரிசில் பெற்ற மகிழ்ச்சியோடு திரும்பிய பாணரும் கூத்தரும் பொருநரும் விறலியும் வறுமையால் வாடும் தம்மையொத்தவர்கள் வழியில் எதிர்பட்டபோது அவர்களும் தாம் பெற்ற பொருளின்பத்தைப் பெற வேண்டும் என்ற விருப்பத்தோடு தமக்குப் பரிசில் வழங்கிய புரவலனை அடைவதற்குரிய வழிகளையும் அப்புரவலனின் நாடு ஊர் புகழ் கொடை முதலியவற்றையும் கூறி பாராட்ட வேண்டிய முறைகளையும் அவர் பரிசில் வழங்கும் பாங்கினையும் பிற செய்திகளையும் கூறி அவனை ஆற்றுப்படுத்துதலே ஆற்றுப்படையின் பொது இலக்கணம்.

## இறைவழிபாடு

ஒரு செயலைச் செய்யத் தொடங்கும் முன்பு ஒவ்வொருவரும் இறைவனை வழிபட்டு செயலைத் தொடங்குவது மரபாகும். புண்டைத் தமிழர்களின் இறைவழிபாட்டு நிலையினை "பண்டைத்

தமிழர்களிலே பெரும்பாலோர் தெய்வ நம்பிக்கையுடையவர்கள் அறிவு நிரம்பிய புலவர்களும் பெரியோர்களும் தெய்வங்களை வணங்கி வந்தனர். தெய்வ வழிபாட்டால் எண்ணிய காரியங்களிலே எளிதில் வெற்றி பெறலாம் என்று நம்பினர். வேண்டுவார் வேண்டியவற்றை அளிக்கும் ஆற்றல் தெய்வத்திற்கு உறுதியாக உண்டு என்று எண்ணினர். துன்புற்றவர்களின் துயரங்களைப் போக்கும் அவர்களை இன்புற்று வாழச் செய்யும். இத்தகைய ஆற்றலும் அருளும் உடையது தெய்வம் என்று நம்பினர். இந்நம்பிக்கை பண்டைத் தமிழரிடம் இயற்கையாகவே குடி புகுந்தது." என சாமி சிதம்பரனார் குறிப்பிடுகிறார்.

பண்டைய தமிழர்கள் நிலங்களை ஐந்து வகையாகப் பிரித்து வாழ்ந்தனர். ஐந்து நிலங்களுக்குரிய தெய்வங்களை உருவாக்கி வழிபட்டு வந்தனர். நான்கு நிலத்தை சேர்ந்த மக்கள் தாம் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப தெய்வங்களை வகுத்துக் கொண்டு இறைவழிபாடு செய்த முறையினை

மர்யோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்

சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே

தொல்-(பொருள்)

என்னும் தொல்காப்பிய நூற்பாவின் வழி முல்லைக்குத் திருமாலும் குறிஞ்சிக்கு முருகனும் மருதத்திற்கு இந்திரனும் நெய்தலுக்கு வருணனும் தெய்வமாகக் கொண்டு வழிபட்ட முறை புலனாகிறது (Ilampuranar, 2012). பாலை நில மக்கள் கொற்றவையினை வழிபட்டதை

மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த

கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே

தொல்(பொருள்)

என்னும் நூற்பாவின் வழி கொற்றவை என்னும் காளி தெய்வம் பாலை நில மக்களுக்கு உரியது என்பதனை உணரலாம் (Ilampuranar, 2012).

பழமுதிர் சோலையில் முருகனை வழிபட் விதம் பற்றி திருமுருகாற்றுப்படை மிக விரிவாகக் குறிப்பிடுகிறது. சிறிய திணை அரிசியினை மலரோடு கலந்தும் ஆடறுத்தும் கோழிக் கொடியோடு முருகனை வரிசையாக நிறுத்தியும் ஊர்கள் தோறும் முருகனுக்கு விழா எடுத்த நிகழ்வினை

"சிறுதிணை மலரொடு விரைஇ மறி அறுத்து

வாரணக் கொடியோடு வயிற்பட நிறீஇ

ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்"

திருமுருகாற்றுப்படை (218220)

என்னும் அடிகள் முருக வழிபாட்டைப் பதிவு செய்கிறது.

பண்டைய தமிழகத்தில் வேள்விகள் செய்து இறைவனை வழிபட்டுள்ளனர். இதனை

"....... ஒரு முகம்

மந்திர விதியின் மரபுளி வழாஅ

அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே"

திருமுருகாற்றுப்படை (94-96)

என்னும் திருமுருகாற்றுப்படை அடிகள் குறிப்பிடுகின்றன. முருகனின் ஒரு முகம் மந்திரத்தையுடைய வேதத்தில் முறை தவறாதபடி அந்தணர்கள் செய்யும் வேள்வியை நினைத்துக்

கொண்டிருக்கும் என்பதிலிருந்து பண்டைய தமிழகத்தில் அந்தணர்கள் வேத முறைப்படி வேள்விகளைச் செய்து வந்தனர் என்பது வெளிப்படுகிறது (Somasundaranar, 2007).

பொருநராற்றுப்படையில் காடுறை கடவுளைப் பற்றிய குறிப்பும் அவற்றிற்குப் பலிதந்து வாழ்த்திப் பாடுதல் பற்றிய குறிப்பும் இடம் பெற்றுள்ளன. காடுறை கடவுள் என்பது காளி கூளி முதலிய தெய்வங்கள் மனம் மகிழும்படி அவற்றிற்குச் செய்ய வேண்டிய முறைமைகளைச் செய்கிறாள் இதனை

"பாடின பாணிக்கு ஏற்ப நாள்தொறும்

களிறு வழங்கு அதர்க்கானத்து அல்கி

இலைஇல் மராஅத்த எவ்வம் தாங்கி

வலைவலந் தன்ன மென்நிழல் மருங்கில்

காடுஉறை கடவுட்கடன் கழிப்பிய பின்றை" பொருநராற்றுப்படை (48-52)

என்னும் பொருநராற்றுப்படை பாடலடிகள் காட்டுகின்றன. இதன் வழி நாள்தோறும் கடவுளை வணங்கி பாடுதலை கடமையாக பொண்டிருந்தனர் என்பதனை அறியலாம் (Rasamanikkanar, 2000).

பாணர் விறலி போன்ற கலைஞர்கள் இசையினைப் பாடத் தொடங்கும் முன் கடவுளை வணங்கி பாடத் தொடங்கினர். விறலியர் மலைவாழ் தெய்வங்களைப் பணிந்து குறிஞ்சிப் பண்ணில் பல பாடல்களைப் பாடுதல் மரபு. இதனை

"கடவது அறிந்த இன்குரல் விறலியர்

தொன்று ஒழுகு மரபின் தம் இயல்பு வழாஅது

அருந் திறற் கடவுட் பழிச்சிய பின்றை

விருந்தின் பாணி கழிப்பி" மலைபடுகடாம் (536-539)

என்னும் மலைபடுகடாம் பாடலடிகள் சுட்டுகின்றன. முதலில் கடவுளை வாழ்த்தி பாடிய பின்னரே பிற பாடல்களைப் பாடினார்கள் என்பது தெளிவாகிறது.

## நம்பிக்கைகள்

நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்படுவன. ஒரு சமுதாயத்தின் நம்பிக்கைகளைக் கொண்டு அச்சமுதாயத்தின் அறிவுத்திறனை அளவிட இயலும். நம்பிக்கைகள் காலங்காலமாக ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்குக் கடத்தப்படுகின்றன. மனிதனின் பிறப்பு தொடங்கி இறப்பு வரையிலும் மக்களிடம் பல விதமான நம்பிக்கைகள் நிலவுகின்றன. மனிதன் சிந்திக்கத் தொடங்கிய நாள் முதலே அவன் மனதில் நம்பிக்கைகள் தோன்றி விட்டன எனலாம்.

நம்பிக்கை என்ற சொல் நம்பு என்ற சொல்லின் அடியாய் பிறந்தது. நம்பிக்கையின் தோற்றத்தினை "மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத பொழுது மனித மனமானது சிலவற்றைப் படைத்து காரணம் கற்பித்துக் கொள்கிறது அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன." என்கிறார் சு. சக்திவேல் அச்ச உணர்வின் அடிப்படையில் நம்பிக்கைகள் தோன்றுகின்றன (Sakthivel, 1983). இதனை "அச்சத்தின் காரணமாக இயற்கையின் தோற்றத்தினையும் செயல்பாடுகளையும் தனது வாழ்வியல் நடப்புக்களோடு இணைத்து வாழ்ந்த நிலையில் நம்பிக்கைகள் தோற்றம் கொண்டன." என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

## இறை நம்பிக்கை

பண்டைத் தமிழர்களில் பெரும்பாலோர் கடவுள் நம்பிக்கை உடையவர்களாக இருந்தனர். மனிதன் இறைவழிபாட்டுப் பழக்கத்தை மேற்கொள்வதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது. அவனுக்கு இறைவனிடம் உண்டான நம்பிக்கை தான் எனலாம். இறைவனை அன்புடன் வணங்கி

வழிபட்டால் அவனது உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர். வேண்டியன வேண்டியோர்க்கு அளிக்கும் ஆற்றல் இறைவனுக்கு உண்டென நம்பினர்.

திருமுருகாற்றுப்படையில் வானத்தை முட்டும் அளவிற்கு உயர்ந்த மலைகளைக் கொண்ட குறிஞ்சி நிலத்தின் தலைவன் பலரும் புகழ்வதற்குரிய சிறந்த மொழிகளைக் கூறும் புலவர்களின் தலைவன் மிகச் சிறந்த பெருமையும் உயர்ந்த பெயரையும் உடையவன் முருகன். ஆவன் வருந்துவோர்க்கு வேண்டியவற்றை அளிக்கும் புகழும் பெயரும் உடையவன் என்பதை

விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!

பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறே!

அரும்பெறல் மரபின் பெரும் பெயர் முருக!

நசையுநர்க்கு ஆர்த்தும் இசை பேராள

அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேய்!”

திருமுருகாற்றுப்படை (267-271)

என்ற அடிகளால் தமிழர்கள் கொண்டிருந்த இறை நம்பிக்கையினை அறிய முடிகிறது.

பண்டைய காலத்தில் நடந்து செல்லும் வழிகளில் கோயில்களைக் கண்டால் வணங்கினர். இசைக்கு மழை பெய்யும் என நம்பியுள்ளனர். முழையை நம்பக் காரணம் இயற்கையில் ஏற்படும் வினைகள் ஒவ்வொன்றும் இறைவனால் நடப்பதே என்பதாகும். இதனை

“பராவரு மரபிற் கடவுட் காணின்

தோழா அநீர் கழியி னல்லது வறிது

நும்மியற் தொடுத லோம்புமின் மயங்குதுளி

முhரி தலையு மல்லல் வெற்பே”

மலைபடுகடாம் (230-233)

என்ற அடிகள் காட்டுகின்றன. நவிரம் என்னும் மலையில் இடைவிடாது மழை பொழிந்து கொண்டிருக்கும். உங்கள் இசைக் கருவியினை மீட்டினால் மழை அதிகரித்து இசைக் கருவிகள் பழுதுபடும் மற்றும் பயணம் செல்லல் அரிதாகிவிடும் என கூத்தர்களை எச்சரிக்கும் விதமாக மலைபடுகடாமில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் வழி இசைக்கு மழை பொழியும் என்னும் நம்பிக்கை வெளிப்படுகிறது (Somasundaranar, 2007).

## தெய்வம் ஏறியாடுதல்

மக்கள் மேல் தெய்வம் ஏறியாடுதலை இது குறிக்கிறது. இன்றும் இதைச் சாமியாடுதல் என்ற சொல்லால் மக்கள் உழரப்பதைக் காணலாம். குறமகள் மேல் முருகன் ஆவேசித்து மக்கள் அறிவால் காணப்படாத எதிர்கால நிகழ்ச்சியினை கூறக் கேட்டு கடவுள் இல்லை என்பவர்கள் அஞ்சினர். முருகாற்றுப்படுத்தல் என்பது முருகன் மக்கள் மேல் ஏறி ஆடப் பெறுதலாகும். இன்று வரை சாமியாடுதலில் இந்நம்பிக்கையைக் காணலாம் இதனை

குருதி செந்தினை பரப்பிக் குறமகள்

முருகிய நிறுத்து முரணினர் உட்க

முருகாற்றுப் படுத்த உருகெழு வியன் நகர்”

திருமுருகாற்றுப்படை (242-247)

என்ற அடிகளால் அறியலாம்.

## பலியிடுதல்

பண்டைத் தமிழர்கள் தெய்வங்களுக்கு உயிர்களைப் பலியிட்டு வணங்கியுள்ளனர். இறைவனுக்குப் பிடித்தமான உயிர்களைப் பலியிடுதல் மூலம் இறைவனின் அருளைப் பெறலாம் என்ற நம்பிக்கையில் பலியிடுதல் என்ற நிகழ்வினை மேற்கொண்டுள்ளனர். இதனைத் தொல்காப்பியர் வெறியாட்டு எனக் குறிப்பிடுகிறார்

"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேவலன்

வெறியாட்டு அயர்ந்த காந்தளும்"

தொல்(பொருள்)

என்பதில் முருகனைப் போல வேடம் பூண்டு கையில் வேலேந்தி ஆடும் பூசாரி கடவுளை அமைதி செய்ய பூசையிட்டு பலியிட்டு ஆடிப்பாடி மகிழ்தலைக் குறிக்கிறது.

## முடிவுரை

இயற்கையின் சீற்றத்தைக் கண்டு அஞ்சிய மனிதன் அதை வணங்கி வழிபட ஆரம்பித்தான் என்றும் மனிதனின் அச்ச உணர்ச்சியிலிருந்தும் தான் இறைவழிபாடு தோன்றியது என்றும் அறிய முடிகின்றது. மனிதனின் பிறப்பு தொடங்கி இறப்பு வரையிலும் மக்களிடம் பலவிதமான நம்பிக்கைகளைக் கொண்டு அச்சமுதாயத்தின் அறிவுத் திறனை அளவிடலாம். ஆற்றுப்படைஅவ்வி; லக்கியங்களில் பழங்கால மக்களிடம் நிலவிய தெய்வம் ஏறியாடுதல் பலியிடுதல் இது போன்ற நம்பிக்கைகள் நிலவியதை அறியலாம்.

## References

Ilampuranar, U.A., (2012) Tholkaapiyam Porulathigaram, kazhaga veliyeedu, Chennai, India.

Rasamanikkanar, Ma., (2000) Pathupattu kaala Aaraichi, Paari Nilayam, Chennai, India.

Sakthivel, Su., (1983) Nattupura Iyal Aaivu, Manivaasagar Pathippagam, Chennai, India.

Somasundaranar, Po. Ve., (2007) Pathupattu Moolamum Uraiyum, kazhaga veliyeedu, Chennai, India.

### Acknowledgement
Nil

### Funding
This study was not funded by any grant

### Conflict of interest
The author declare that they have no actual or potential conflict of interest, including financial, personal or other relationships with people or organizations that could have inappropriately influenced this work.

### About the License
© The author(s) 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

### Cite this Article

V. Rasambal, The spiritual rituals and the faiths present in the Aaruppadai Literatures, Indian Journal of Tamil, 2(3) (2021) 21-25. https://doi.org/10.34256/ijot2134